அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 364

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
01 -04- 1987.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

இலங்கை விஞ்ஞான சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான ஆட்சேர்ப்புத் திட்டமும் வினைத் திறமை காண் தடைப் பரீட்சைகளும்.

02, செப்டம்பர் 1986ஆம் ஆண்டின் 341-ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இத்தால் தள்ளுபடியாகிறது.

02. 17.07.1986ஆம் தேதிய 327(111)-ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 02.05.1986ஆம் தேதிய 327-ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 8(1)-ஆம் பந்தியைப் பார்க்க. அதன்படி இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு 11 தரம் 11ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் சித்தியடைய வேண்டிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகள் வருமாறு:-

03. 1-ஆம் வினைத்திறன் காண் தடை

(அ) இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு 11 தரம் 11க்கு நியமிக்கப்படும் ஓர் உத்தியோகத்தர் அவரது சம்பள அளவுத் திட்டத்துக்குப் பொருந்தும் ரூ.20,400/-ஐ அடைவதற்கு முன் 1-ஆம் வினைத்திறமை காண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

விதிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:

(1) நிதி
(11). நிருவாகம்
(111). அலுவலக ஒழுங்கு விதிகள்

(ஆ) மேற்போந்த விடயங்களுக்கான பாடத்திட்டம் பின்னிணைப்பு 'அ' இல் தரப்பட்டுள்ளது.

(இ) இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு 11 தரம் 11ஐச் சேர்ந்த ஓர் உத்தியோகத்தர், தற்பொழுது இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய அரசாங்க சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும் மேற்போந்த விடயங்களில் நடத்தப்படும் பரீட்சைகளுக்கும் தோற்றுதல் வேண்டும். விஞ்ஞான சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இந்தப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கு வேண்டிய ஒழுங்குகள் யாவும் பரீட்சை ஆணையாளரின் உடன்பாட்டுடன் செய்யப்படும்.

(ஈ) மேற்போந்த 03(அ)(111)-இல் குறிப்பிடப்பட்ட "அலுவலக ஒழுங்கு விதிகளைப்" பொறுத்த வரையில் அலுவலக ஒழுங்கு விதிகள் வித்தியாசப்படுவதால் விஞ்ஞான சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்-கள் அனைவருக்கும் ஒரு பொதுப் பரீட்சையை நடத்துதல் சாத்தியமில்லை. ஆகவே உரிய அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் வருடம் இரு தடவை இந்தப் பரீட்சையை நடத்துவதற்கு இந்த விடயத்துக்கான பாடத்திட்டத்தைத் தயாரித்து நாமப் பதிப்பாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு திணைக்களத் தலைவர்கள் அனைவரும் வேண்டப்படுகிறார்கள்.

..6

குறிப்பு (1) இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு 11 தரம் 11க்கு நியமிக்கப் படும் ஓர் உத்தியோகத்தர் 3 வருட தகுதிகாண் நிலைக்குட்படுவார்.

இக்கால எல்லை முடிவுறும் பொழுது இவர் ,

(அ) 1-ஆம் விளைத்திறமை காண் பரீட்சையில் சித்தியடைந்து

(ஆ) விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடைந்து அவரது வேலையும், வரவும் நடத்தையும் திருப்திகரமாயிருந்தால் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார்.

(11) மூன்று வருட முடிவில் இந்தப்பரீட்சையில் இவர் சித்தியடையாவிடில் இவரது நியமனம் முற்றுப் பெற இடமுண்டு.

(111) உரிய துறையில் பட்டப் பின் கல்வித் தகைமைகளை உடையவரும் ரூ.20,400/-க்கு மேற்பட்ட சம்பள அளவுத் திட்டமொன்றில் அமர்த்தப்பட்டவருமான ஓர் உத்தியோகத்தர் இரண்டு வருடங்களுக்குள் 1-ஆம் விளைத் திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

04. <u>2-ஆம் விளைத்திறமை காண் தடை</u>

(1) இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு 11 தரம் 11க்கு நியமிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தர் அவரது சம்பள அளவுத் திட்டத்துக்கு உரிய ஆண்டுச் சம்பளப் படிநிலையான ரூ.24,600/-ஐ அடைவதற்கு முன்னர் 2-ஆம் விளைத்திறமை காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(11) தற்போது வழக்கிலுள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்துடன் இணங்கும் வகையில் அவர் உரிய துறையில் விதித்த ஒரு பயிற்சி நெறியை திருப்திகரமாகப் பின்பற்றுவதன் மூலம் பூரண தொழில் சார் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன்/அல்லது உரிய துறையில் எம்.ஏ., எம்.எஸ்.சி அல்லது பி.எச்.டி. ஆகிய பட்டப் பின் கல்விப் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(111) இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு 11 தரம் 11 ஐச் சேர்ந்த ஓர் உத்தியோகத்தர் 45 வயதை அடையும் பட்சத்தில் 1-ஆம், 2-ஆம் விளைத் திறமை காண் பரீட்சைகளிலிருந்து அவருக்கு விதிவிலக்களிக்கப்படும். எனினும் அவர் பூரண தொழில்சார் தகைமைகளைப் பெறும்வரை வகுப்பு 11 தரம் 11-க்கு அப்பால் பதவி உயர்வு பெறுவதற்கு தகுதியுடையவராகார்.

05. 1-ஆம், 2-ஆம் விளைத் திறமைகாண் தடைப் பரீட்சைகள் சம்பந்தமான அதாவது பூர்த்தி செய்தல் விதிவிலக்கு காலத்தை நீடித்தல் முதலியனவை சம்பந்தமான வேண்டுகோள்கள் எவையேனும் இருப்பின் அவற்றை உத்தியோகத்தர் உரிய திணைக்களத் தலைவரினூடாக அரசாங்க நிருவாக அமைச்சின் செயலாளரும், இலங்கை விஞ்ஞான சபையின் தலைவருமான நியமன அதிகாரிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. <u>ஆட்சேர்ப்புத் திட்டம்.</u>

(1) 13.02.1980ஆம் தேதிய இலங்கை விஞ்ஞான சேவைகள் பிரமாணக் குறிப்பின் (02)-ஆம் பந்தியையும் மேற்போந்த 02-ஆம் பந்தியையும் பார்க்க இந்தச் சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்துரைகளுக்கிணங்க உங்கள் அமைச்சில்/திணைக் களத்தில் தற்போதுள்ள <u>விஞ்ஞான சேவை பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தைத்</u> திருத்துவதற்கு <u>30 நாட்களுக்குள்</u> நடவடிக்கை எடுக்கவும்.

(11) ஆட்சேர்ப்புத் திட்டத்தைத் திருத்துதற்கான எல்லா வேண்டுகோள்களும் <u>விஞ்ஞான சேவைகள் சபைச் செயலாளருக்கான ஒரு பிரதியுடன்</u> தாபனக் கோவையின் 11-ஆம் அத்தியாயத்தில் சொல்லப்பட்டபடி தாபனப் பணிப்பாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

..6

பின்னிணைப்பு 'அ' (அரசாங்க நிருவாக சுற். இல. 364)

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு 11 தரம் 11ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான 1-ஆம் வினைத்திறமை காண் தடைப் பரீட்சையின் பாடத்திட்டம்.

1. 1-ஆம் வினைத் திறமைகாண் தடைப் பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும்.

(1) நிதி
(11) நிருவாகம்
(111) அலுவலக ஒழுங்கு விதிகள்

2. ஓர் உத்தியோகத்தர் 1-ஆம் வினைத்திறமை காண் தடைப் பரீட்சையின் பாடங்களுக்கு ஒரே தடவையில் அல்லது வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தோற்றலாம்.

3. ஒவ்வொரு வினாத்தாளும் மூன்று மணித்தியாலயங்களைக் கொண்டது.

4. பரீட்சைத் திட்டம்.

(1) நிதி

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள்.

(அ) அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் பகுதி 1 ( X -ஆம் அத்தியாயம் நீங்கலாக)

(ஆ) நடப்பு ஆண்டின் மதிப்பீடுகள் உதா. மதிப்பீடுகளைத் தயாரித்தல், அரசிறைத் தலைப்பு, நிதியும் ஒதுக்கீட்டு செய் சட்டங்களும்.

(இ) கச்சேரிகளில் கையாளப்படும் குறிப்பிட்ட கணக்குகள் சம்பந்தமான கட்டளைச் சட்டங்கள்.

குறிப்பு: ஒரு பரீட்சார்த்தி 40 வீதப் புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

(11) நிருவாகம்

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள்.

(அ) அலுவலக, கள அமைப்பும் முறைகளும்

(ஆ) தாபனக் கோவையின் I, II, III, V, VI, VII, IX, XVI, XXI, XXIV, XXIX, XXX, XXXIII, XXXV, XXXVI, XXXVIII, XXXIX, XLI, XLIII, XLIV, XLVII? XLVIII. ஆம் அத்தியாயங்கள்.

குறிப்பு: ஒரு பரீட்சார்த்தி 40 வீதப் புள்ளிகளை பெறுதல் வேண்டும்.

(111) திணைக்கள ஒழுங்கு விதிகள்

சுற்றறிக்கையின் பந்தி 03(ஈ)ஐப் பார்க்க.

குறிப்பு: ஒரு பரீட்சார்த்தி 40 வீதப் புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

(111) 1-ஆம், 2-ஆம் வினைத்திறமை காண் தடைப் பரீட்சையைத் தாண்டுவதற்கு முன் பிரஸ்தாப பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள் தோற்றுதற்குரிய பரீட்சைகள் பெற்றுக் கொள்ள வேண்டிய பயிற்சி பட்டப் பின் கல்விப் பட்டங்கள் என்பன ஆட்சேர்ப்புத் திட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(1V) தற்போது நடைமுறையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தில் முன்னரே குறிப்பிட்டிருந்த தகைமைகளைக் குறைத்தல் சாத்தியமில்லை.

(V) விஞ்ஞான சேவை பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டங்களின் உரிய வகையில் திருத்தப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விஞ்ஞான சேவைகள் சபையின் செயலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(V1) திருத்தப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டமொன்று இன்றி..........1987 க்குப் பின்னர் இலங்கை விஞ்ஞான சேவைகளுக்கு நியமனங்கள் பதவி உயர்வுகள் வெற்றிடங்களை நிரப்புதல் என்பன நடைபெறா.

07. இந்தச் சுற்றறிக்கையில் அடங்கியுள்ள விடயங்களை உங்கள் அமைச்சில்/திணைக்களத்தில் உள்ள சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரின் கவனத்திற்குக் கொண்டு வருக.

08. இந்த சுற்றறிக்கை கிடைத்தமை பற்றி தயைகூர்ந்து அறியத் தருக.

ஒப்பம்: டி.பி.ஜ.பி.எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.